செய்தி வெளியீடு எண்:611 நாள்: 23.12.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (23.12.2016) தலைமைச் செயலகத்தில், பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்ஸ் 2016 போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. த. மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 2 கோடி ரூபாய்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 1 கோடி ரூபாய்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்க 19.12.2011 அன்று ஆணையிட்டார்கள். அதேபோன்று, ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 லட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 30 லட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 20 லட்சம் ரூபாய் என ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்கினார்கள்.

பிரேசில் நாட்டின், ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்ஸ் 2016 போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. த. மாரியப்பன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதோடு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று 10.9.2016 அன்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்பின்படி, பாரா ஒலிம்பிக்ஸ் 2016 போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற திரு. த. மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையான 2 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., திரு. த. மாரியப்பன் அவர்களின் பயிற்சியாளர் திரு. சத்யநாராயணா ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**
**நாள் : 23.12.2016**